# திருமூலர் உணர்த்திடும் வாழ்வியல் தத்துவங்கள்

**முனைவர் க.ச.பவானி**
**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**
**அவினாசிலிங்கம் மனையியல்மற்றும் மகளிர்உயர்கல்வி நிறுவனம்,**
**கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.**
ORCiD: https://orcid.org/0009-0006-0795-2145
bhavani_tam@avinuty.ac.in

45

**ஆய்வுச் சுருக்கம்**

ஒவ்வொரு மனிதனின் அகத்திலும் இறை உணர்வு மறை பொருளாக பொதிந்துள்ளது. அவ்வுணர்வை உணர்ந்து இறையனுபவத்தைப் பெற்று இன்புறுகின்றனர் சிலர். இவ்வுணர்வோடு ஒட்டாமல் ஒதுங்கிச் செல்கின்றனர் சிலர். இறையனுபவத்தோடு ஞான நிலை பெற்று யோகா மார்க்கம் பெற்றவர்களே சித்தர்கள் ஆவார்கள். இவர்கள் சித்துக்கள் பலவற்றை தனது ஞானத்தாலும் யோகத்தாலும் செயல்படுத்துகின்றனர். மகிமா, லஹிமா, பிரார்த்தி, பிரகாமியம் ஈசாத்துவம், வசித்துவம், கரிமா போன்ற அட்டமாசித்திகளை பெற்றவர்கள் ஆவர். மனிதர்களால் செய்ய முடியாத செயற்கரிய செயலை செய்பவர்களே சித்தர்கள். பண்டைய காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் பதினெட்டு பேர் என்று நூற்குறிப்புகள் குறிப்பிடுகின்றன. அதன் பிறகு பல சித்தர்கள் இன்று இருப்பதாக அறியப்படுகிறது. பதினெட்டு சித்தர்களின் திருமூலரும் ஒருவராகப் போற்றப்படுகிறார். இவர் சைவ சித்தாந்தத்தின் தந்தையாக கருதப்படுகிறார். இவரின் திருமந்திர பாடல்கள் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகவும், சித்தர் இலக்கியங்களில் சிறப்பிடமும் பெற்ற திகழ்கின்றன.

**திறவுச் சொற்கள்**

வாழ்வியல் –அறம் - நிலையாமை – யாக்கை - முக்தி

**முன்னுரை**

உலகலாம் உணர்ந்து ஓதற்கு அரியராயுள்ள சிவபெருமான் உயிர்கள் மீது வைத்த கைமாறற்ற பெருங்கருணையாளன். இக்கருணையை கைவரப்பெற்ற மூலநாரின் உள்ளத்தில் எள்ளுக்குள் எண்ணெய் போல் இருந்த அருட்பேராற்றல் உயிர்ப்பித்தது. சமய தத்துவம், சைவ

சித்தாந்தக் கோட்பாடு, நிலையாமைக் கருத்துக்கள் என திருமூலரின் அறிவுக்கு எட்டிய வகையில் மிகவும் எளிமையாகவும் வகைப்படுத்தி வெளிப்படுத்தியும் உள்ளார். மனித உயிர்கள் இறையுணர்வில் திளைத்து பிறவி நீக்கம் பெற வேண்டும் என்பதே அவரின் வழிகாட்டுதல் ஆகும். உடலில் அகமும் புறமும் தூய்மையாகக் கொண்டு அன்பு நெறி மேலோங்குவது முக்திக்கு வழி என வகுத்துரைத்தார். அவரின் வாழ்வியல் தத்துவங்களை எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திருமூலரும் திருமந்திரமும்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர்கள் பெரும்பங்கு பெற்றுள்ளனர். யோகத்தின் மூலம் உடல், உயிர், மனம் இவை மூன்றையும் செம்மைப்படுத்திக் கொள்ள வழியும் கூறி இருக்கின்றனர். இவர்களின் ஒருவராக புகழப்பட்ட திருமூலர் தமது ஞான மார்க்கத்தில் இறைவனை கண்டு இறையின் அருட்பேராற்றலை உணர்ந்து அவ்வுணர்வில் தெளிந்து சீவன் சிவனாதலின் சிறப்பினையும் இறையை அடையும் வழிமுறைகளையும் மிகத் தெளிந்த அறிவு நுட்பத்துடன் அறிவுறுத்தும் சமய தத்துவ விளக்க நூலை திருமந்திரம் ஆகும். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் திருமூலரின் அனுபவப் பிழிவாகவும் விளங்குகின்றது. இந்நூலில் நம் சமயம் வழி வாழ்வியல் தத்துவங்கள் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

**அன்புடைமை**

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். இவ்வாறான அரிதாகக் கிடைக்கக்கூடிய மனித வாழ்க்கையானது மிகச் சிறப்பாக அமைவதற்கு அன்பு அவசியமான ஒன்றாகும். அது வெறும் உணர்வு மட்டுமல்ல, வாழ்க்கை முறையும் ஆகும். இத்தகைய மகிமை பொருந்திய அன்பு நெறியைக் கொண்டு இறையன்பையும் அருளையும் பெறலாம் என்பதைத் திருமூலர் வாக்கினால் அறியலாம். அன்பு செலுத்துபவரை இறைவனே ஆட்கொள்வான் என்பது திருமூலனாரின் வாக்கு. உயிர்கள் தன்னிடம் அன்பு செய்தலை இகழ்ந்ததையும் மெய்யன்பு கொண்டிருத்தலையும் சிவன் அறிவான், இறைவனை எம்பெருமான் அதற்கு ஏற்ப மகிழ்ந்து அருள் செய்வான். தன்மாட்டுத் தளிர்ந்து வரும் அன்பு காட்ட வல்லாருக்கு மகிழ்ந்து அன்பு செலுத்தும் அளவுக்கு அருள் செய்வான் என்பதனை,

**இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்**
**உகந்து அருள் செய்திடும் உத்தம நாதன்**
**கொழுந்து அன்பு செய்து அருள் கூற வல்லாருக்கு**
**மகிழ்ந்து அன்பு செய்யும் அருள் அது ஆமே (திருமந்திரம் பா. 285)**

என்ற பாடலடியின் மூலம் உணரலாம்.

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலாருக்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு** **(குறள் 80)**

என்ற குறட்பாவில் அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அன்பு இல்லாதவருக்கு எலும்பைத் தோலால் போர்த்த உடம்பு மட்டுமே ஆகும் என்று திருவள்ளுவர் திறம்பட கூறுகின்றார்.அன்பினைப் பற்றி பாம்பாட்டி சித்தரோ அகத்தில் எள்ளளவும் அன்பு இல்லாதவர்கள் முக்தி எய்த முடியாது என்று முடிக்கிறார்,

**எள்ளளவும் அன்பகத்தில் இல்லா தார் முத்தி**
**எய்துவது தொல்லுலகில் இல்லை யெனவே**
**கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைச்**
**கண்டு தொழுதே களித்தாடாய் பாம்பே** **(பாம்பாட்டி சித்தர் பாடல்கள், பா. 88)**

என்ற பாடல் அடியில் உணரலாம்.

**அறம்**

நம் முன்னோர்கள் நமது வாழ்க்கை முறைமையை முப்பெரும் கோட்பாடுகளாக பிரித்தனர். அவை அறம் பொருள் இன்பம் என்பனவாம். இவற்றில் அறம் தலைமை உடையது. எண்ணம், சொல், செயல் ஆகியவற்றை தூய்மையினும் நன்னெறியிலும் செலுத்துவது அறம் எனலாம். மனிதன் தனக்கென ஆராய்ந்து வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளில் கூட்டமைப்பை அறம் எனலாம். அறம் செய்பவனின் திறத்தையும் அறம் செய்யாதவனின் இயல்பினையும் திருமூலர் தனது முதல் தந்திரத்தில் சிறப்புற விளக்கியுள்ளார். ஒருவன் அறம் செய்தலை மிகவும் எளிய முறையில் எடுத்து இயம்பியுள்ளார். உணவை உண்பதற்கு முன்பு இறைவனை பச்சிலையிட்டு வணங்குதல், பசுவிற்கு ஒரு வாயளவு புல் அளித்தல், பிறர் உண்பதற்கு சிறிது உணவு கொடுத்தல், பிறரிடம் இனிய சொற்களை பேசுதல் என நாம் எளிமையாக செய்யும் செயலே அறம் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை,

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**

**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**

**யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி**

**யாருக்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.** **(திருமந்திரம் பா. 252)**

என்ற பாடலடியில் உணர்த்துகின்றார்.

நோயற்ற உடம்பை பெற்று வாழும் மக்கள் இவ்வுலகத்தில் பலருக்கும் உதவ வேண்டும் என்றும் தன்னலம் ஒன்றை மட்டுமே குறியாக கொண்டு வாழ்வது மனிதத்தன்மையாக ஆகாது என்று அறவுரைகள் பலவற்றை கூறியுள்ள கொங்கண சித்தர்,

**ஏழை அனாதிகள் இல்லை என்றால் அவர்க்கு**
**இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும்;**
**நாளை என்ற சொல்லல் ஆகாதே; என்று**
**நான் மறை வேதம் முழங்குதடி (கொங்கண சித்தர் பாடல்கள்79)**

என்ற பாடலடியில் ஏழைகளும், ஆதரவற்றவர்களும் வயிற்றுக்கு ஒன்றும் இல்லை என்று கூறினால் அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். நாளைக்கு வாருங்கள் என்று சொன்னால் அவர்கள் பசி அடங்காது எவ்வாறு அறம் கூறும் வேதங்கள் முழங்குகின்றன என்று கூறியுள்ளார். மனதில் மாசு இல்லாத தன்மையே அறம், மாசு நீங்காமல் செய்யும் செயலும், சொல்லுஞ் சொல்லும் வீண் ஆரவாரமானவை என்று வள்ளுவர் கூறுகின்றார். தன் குறட்பாவில்,

**அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றஅது**
**பொன்றுங்கால் பொன்றா துணை (குறள் 36)**

உயிர்களுக்கு அறமே உற்ற துணை என்பது தெளிவாகின்றது.

**கல்வி**

அறிவே தெய்வம் என்பது ஆன்றோர்கள் கொள்கை. அறிவு மனிதனின் எல்லா நன்மைகளுக்கும் அடிப்படையானது. அறிவினால் தான் மக்கள் இயற்கைகளை எல்லாம் அடக்கியாளும் ஆற்றலை அடைந்திருக்கின்றனர். இத்தகைய அறிவுக்கு முக்கியமானது கல்விச்செல்வம் ஆகும். இக்கல்வியின் சிறப்பை திருமூலர் உண்மையான கல்வியை கற்றவர் எண்ணிப் பார்க்கும் போது அவர்களது கருத்தில் ஞானக்கண் புலனாகும். அவர்கள் அவ்வாறு புனலாகும் உண்மையைச் சிந்தித்து மற்றவர்களுக்குக் கண்டவற்றை எடுத்துக் கூறுவர். ஒரு கல் தூண் போல் அவர்கள் சலனம் இல்லாது இருந்து மற்றவருக்கு உணர்த்தி அவர்களுக்கு ஞானக்கண் உண்டாகுமாறு செய்வார் என்கிறார். இதனை,

**கற்றது வாளர் கருதிய காலத்துக்**
**கற்றறி வாளர் கருத்தில் ஓர் கண் உண்டு**
**கற்றறி வாளர் கருதி உரைசெய்யும்**
**கற்றது காட்டாக் கயல் உளஆக்குமே. (திருமந்திரம் பா.291)**

என்ற பாடலடியில் கூறுகிறார்.

**ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவருக்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து**

**(குறள்.398)**

என்ற குறட்பாவில் ஒரு பிறவியிலே தான் கற்ற கல்வியானது ஒருவனுக்குத் தொடர்ந்து வரும் ஏழு பிறப்புகளிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையதாகும் என்று கல்வியின் சிறப்பினை திருவள்ளுவர் தன் குறலடியால் விளக்குகிறார். வாழ்க்கையும் கல்வியும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ளது. அறிவின் ஏற்றத்திற்கும் ஒழுக்க உயர்வுக்கும், பண்பாட்டின் வளர்ச்சிக்கும் கல்வி முதலாவதும் முக்கியமானது ஆகும்.

**கல்லாமை**

அனுபவ அறிவு, கல்வி அறிவு என்று மனிதனின் அறிவுத்திறனை இரண்டாகப் பகுக்கலாம். அனுபவ அறிவு என்பது காலச்சூழலுக்கு ஏற்றார் போல் மாறுபடும் தன்மை கொண்டது. இவ்வறிவு எல்லா இடத்திற்கும் ஏற்றபடி அமைவது கடினம். கல்வியறிவு எக்காலத்திற்கும் எவ்விதத்திற்கும் நம்மை தைரியத்துடன் செயல்பட உறுதுணை புரியும். இக்கல்வியறிவு இல்லை என்றால் வாழ்க்கையில் பல இன்னல்களை நாம் சந்திக்க வேண்டியதாக இருக்கும். கல்வியறிவு இல்லாதவரை கடையேன் எனவும் பல நூல்கள் சாடியுள்ளன. கல்லாதவரை திருமூலர்,

**கல்லாத மூடரைக் காணவும் ஆகாது**
**கல்லாத மூடர் சொல் கேட்க் கடன் அன்று**
**கல்லாத மூடருக்கு கல்லாதார் நல்லராம்**
**கல்லாத மூடர் கருத்து அறியாரே ( திருமந்திரம் பா. 317)**

என்ற பாடலடியில் கற்று அனுபவம் இல்லாத மூடரை பார்க்கவும், அவர் சொல் கேட்கவும் நமக்கு கடமை இல்லை, கல்வி அனுபவம் இல்லாதவர் தம் உள்ளத்தில் சிவபெருமான் உணர மாட்டார் என்றும் கூறுகின்றார்.

**உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர் (குறள் 406)**

என்னும் குறட்பாவில் கல்லாதவரை களர் நிலத்தை போன்றவர்கள் என்று திருவள்ளுவர் சாடுகிறார். பாட்டினதாரும் தனது பாடலடியில்

**கல்லாப்பிழையும், கருதாப் பிழையும், கசிந்து உருகி**
**நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்**
**சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்**
**எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே (பட்டினத்தார்**

**பாடல்கள்.09)**

தான் இறைவனை நினையாதது பிழை என்று கருதிய பட்டினத்தார் இப்பாடலின் முதலடியில் கல்வி கற்காதது பிழையென கருதுவது அவர் கல்வியின் பால் கொண்ட சிறப்பினை அறியமுடிகிறது. ஔவையாரும் நீட்டோலை வாசியாதவனை நன்னமரம் என்று சாடுகிறார்.

**நிலையாமை**

நிலையாமை என்பது நிலைத்து நில்லாதது. இப்பூவுலகில் வாழும் நமது உடல், உயிர், செல்வம் எதையும் நிலைத்து வாழும் தன்மையற்றது. இதனை தொல்காப்பிய காலத்தில் இருந்து இன்றுவரை பேசப்பட்டு வரும் செய்தியாகும்.

**பாங்கரும் சிறப்பின் பல்லாற்றாமை**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல். புறத் 18)**

என்று நிலையாமையை விழுமிய நோக்குடன் படைக்கப்பட்ட தொல்காப்பியம் சுட்டும் இக்கருத்து முதலில் உற்று நோக்கத்தக்கது. திருமூலர் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என்ற நான்கு தத்துவங்களையும் விளக்கியுள்ளார். உடலினை விட்டு உயிர் சென்று விடின் உடலுக்கு பிணம் என்ன பெயரிட்டு, சுடுகாட்டில் கொளுத்தி விட்டு, நீரில் மூழ்கி எழுந்து இறந்தாரின் நினைவை மறப்பர் என்பதை,

**ஊரெல்லாம் கூடி ஒழித்து அழுதிட்டு**
**பேரினை நீக்கி பிணம் என்று பெயரிட்டு சூரை**
**அருங்காட்டை கொண்டு போய் சுத்திட்டு**
**நீரில் மூழ்கி நினைவு ஒழிந்தார்களே (திருமந்திரம் பா. 145)**

என்பதில் உயிர் உடல் கூட்டை விட்டு பிரிந்தால் உடலை வைத்து போற்ற மாட்டார்கள் என்றும் பல பாடல்களில் யாக்கை நிலையாமையை பாடியுள்ளார்.

யாக்கை நிலையாமை போலவே செல்வமும் நிலைத்து நிற்பது இல்லை காலச்சக்கரம் சுற்றிவரும் போது உயர் நிலையில் இருப்பவர் கீழே வருவதும் கீழ் நிலையில் உள்ளவர் மேல்நிலைக்கு செல்வதும் என்று வாழ்க்கை முறை நடந்து கொண்டுதான் இருக்கிறது. செல்வம் நிலையானது என எண்ணி வாழும் மக்களின் எண்ணங்கள் பொய்யானவை என்று செல்வம் அழிந்து படுவன என்றும் இறை செல்வமே நிலையானது என்பதையும் தம் பாடலில் திருமூலர் வற்புறுத்தி கூறியுள்ளார். இதனை

**இயக்கு உறுதிங்கள் இருட்பிழம்பு ஒக்கும்**
**துயங்கு உறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா;**
**மயங்கு அறநாடுமின் வானவர் கோனை**

**பெயல் கொண்டல் போலப் பெருஞ்செல்வம் ஆமே (திருமந்திரம் பா.169)**

என்ற பாடல் வழி உணரலாம் இவரை போலவே திருவள்ளுவரும் செல்வம் நிலையாமையை

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**

**அற்குப ஆங்கே செயல் (குறள் 333)**

என்று செல்வம் நிலைக்காத இயல்பை உடையது அத்தகைய செல்வத்தைப் பெற்றால் பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களை செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். திருமூலர் இறைவனான அருட்செல்வமே உண்மையான செல்வம், கடைசிவரை உடன் வரும் செல்வம் என்றும் பிற செல்வம் நிலையற்றது என்றும் பல பாடல்களில் எடுத்துக் கூறியுள்ளார்.

இளமை நிலையாமை என்பது இளமைத் தன்மை மாறும் இயல்புடையது. இந்த இளமைக்காலத்தில் எதையும் அடைய வேண்டும் என்ற மனம் மேலோங்கி இருக்கும். காம உணர்வு மேலோங்கி முளைத்து நிற்கும் இளமைக்காலத்திலேயே இறையுணர்வைப் பெற்றிட வேண்டும் என்று திருமூலர் கூறுகிறார். இதனை,

**தேய்ந்துஅற்று ஒழிந்த இளமை கடைமுறை**
**ஆய்ந்துஅற்ற பின்னை அரிய கருமங்கள்**
**பாய்ந்து அற்ற கங்கைப் படர்சடை நந்தியை**
**ஓர்ந்து அற்ற கொள்ளும் உயிர் உள்ள போதே. (திருமந்திரம் பா.179)**

என்ற பாடலடியில் இளமை நாள்தோறும் சிறிது சிறிதாக தேய்ந்து இறுதியில் இற்று ஒழியும் முதுமை அடைந்த பின் அறிய செயல்கள் செய்ய முடியாதவை ஆகும். எனவே இளமையான உடம்பு இருக்கும் போதே கங்கை ஆறு பாயும் சடையை உடைய சிவபெருமானை ஆய்ந்து அவனிடம் பொருந்துங்கள் என்று திருமூலர் இளமையிலேயே இறை அருளை பெற அறிவுறுத்துகிறார்.

**பருவம் எனைத்து உள? பல்லின் பால் எனை**

**இரு சிகையும் உண்டீரோ, என்று வரிசையால்**

**உள்நாட்டம் கொள்ளப்படுதலால், யாக்கை கோள்**

**எண்ணார், அறிவுடையார் (நாலடியார்.பா. 18)**

இளமை எங்கே? பற்கள் என்னவாயின? உணவை மென்று உண்ண முடிகிறதா? என்றெல்லாம் பருவம் முதிர்ந்த வயதானவர் நிலையைக் கேட்டறிந்தால் இளமையின் உடல் வலிமையானது என்று நினைக்க மாட்டார்கள் என்ன அற்புதமான இளமையின் நிலைமை எடுத்துரைக்கும் நாலடியாரின் கருத்துக்கள் இங்கே போற்றத்தக்கன.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே அவனுடைய இறப்பானது இறைவனால் நியமிக்கப்பட்டு விடும் என்று மக்கள் உறுதியாக நம்புகின்றனர். உயிருக்கு பிறப்பு என்று இருந்தால் இறப்பு இருக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்தது ஒன்றே. இவற்றை நன்கு உணர்ந்த திருமூலர் தமது எண்ணத்தில் தோன்றிய உயிர் நிலையாமைக்கு பல பாடல்களை இயற்றியுள்ளார். உயிர் வாழ்க்கை முடிவதற்கு முன்பே இறைவன் திருவடியை ஏத்தி உய்யுங்கள் என உயிர் நிலையாமையினைக் கூறுகின்றார். இவ்வுலகில் பிறப்பதும் இறப்பதும் சிறு பொழுதே என உணர்வீர்கள் ஆக என்று இயம்புகின்றார். இதனை,

**மாறுதிருத்தி வரம்பு இட்ட பட்டிகை**
**பீறும் அதனைப் பெரிது உணர்ந்தார் இல்லை**
**கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவதும்**
**ஈறும் பிறப்பும் ஓர் ஆண்டு எனும் நீரே. (திருமந்திரம் பா.192)**

என்ற வரிகளில் திருமூலர் உணர்த்துகின்றார். வள்ளுவரும் உயிர் நிலையாமை என்பதை தன் குறட்பாவில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். உடம்பின் ஒரு மூலையில் குடியிருக்கும் உயிருக்கு நிலையாக புகுந்திருக்கும் வீடு இதுவரை அமையவில்லையோ என்று கேட்கின்றார். இதனை

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிருக்கு (குறள் . 340)**

என்ற அடிகளில் விளக்குகிறார். ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் மீண்டும் எழ மாட்டார் என்ற வரிகளில் மூலம் அவ்வையார் நல்வழியில் அழகாக கூறியுள்ளார். சித்தர்கள் கூட்டத்தில் ஒருவரான சிவவாக்கியர் என்பவரும் செத்தார் பிழைப்பதில்லை என்பதை சிறந்த உதாரணங்களுடன் பாடி இருக்கின்றார் .

**கரந்தபால் முளைபுகா; கடைந்த வெண்ணெய் மோர் புகா!**
**உடைந்து போன சங்கின் ஓசை, உயிர்களும் உடல் புகா;**
**விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகா;**
**இறந்தவர் பிறப்பதில்லை, இல்லை; இல்லை; இல்லையே (சிவாக்கியர் பா.45)**

இறந்தவர் பிழைப்பதில்லை என்பதை இப்பாடலில் தெளிவாக காட்டுகின்றார் உடலில் இருந்து வெளிப்பட்ட உயிர் மீண்டும் உடம்பிலே போவது இல்லை என்பதை தக்க சான்றுடனும் இப்பாடலில் விளக்கியுள்ளார். உயிர்நிலையாமையான ஒன்று அவ்வுயிர் உள்ள போதே

விவேகத்தோடு வாழத் தொடங்கும் நமது சமய வாழ்க்கைக்கு சில ஒழுக்கங்கள் அடிப்படையாக இருக்க வேண்டும் என்று திருமூலர் அற்புதமாக கூறுகின்றார்.

**பிறர் மனை நயவாமை**

பிறருடைய மனைவியை விரும்புதல் இழிவான செயலாக கருதப்பட்டது. அறநூல்கள் பலவும் இதை பல நூல்களில் கூறியுள்ளனர். பிறர் மனைவியை நாடுவது அறியாமை என்கிறார் திருமூலர் இதனை,

**ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறு காளையர்**
**காய்ச்ச பலாவின் கனிஉண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே (திருமந்திரம் பா.201)**

என்ற பாடலடியில் அன்புடைய மனைவி வீட்டிலே இருக்க,அவளை விட்டுப் பிறரால் காக்கப்படும் மனைவியா் விரும்பும் காமியர் செயல் வீட்டில் நன்கு காய்த்துப் பழுத்துள்ள பலாப்பழத்தை உண்ணாமல், காட்டில் பழுத்துள்ள ஈச்சம்பழத்தைப் பெறத் துன்பப்படுவது போன்றாகும் என்கிறார்.

பெருவாயின் முள்ளியார் நரகத்துக்குச் செலுத்துவன என்று அறமல்லாத ஒழுக்கங்களைக் கூறும் போது முதலில் சொல்லுவது பிறர் மனைவியை விரும்புதலைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதனை,

**பிறன்மனை கள் களவு சூது டிகபலையொடு**
**அறன் அறிந்தார் இவ்வநை;தும் நோக்கார்- திறன் இலர் என்று**
**ஐயம் புகுவித்து அருநிரயத்து உய்த்துடும்**
**தெய்வமும் செற்று விடும் (ஆசாரக் கோவை பா.37)**

என்ற பாடலடியில் உணர்த்துகிறார்.

**தொகுப்புரை**

பதினெண் சித்தர்களில் சிறந்த ஞானியாய் விளங்கியவர் திருமூலர். இவரின் அனுபவ பிழிவாக தெளிந்த நூல்கள் பலவாயினும் தமக்குக் கிடைக்கப் பெற்ற திருமந்திர நூல்களில் இடம் பெற்றுள்ள பாடல்கள் தத்துவக் கோட்பாடுகள் பலவற்றை உள்ளடக்கியது. தமது வாழ்வியல் அனுபவங்களை தந்திரங்களாக பாடியுள்ளார். இன்றைய சமூகத்திற்கு வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய அன்பு, அறம், கல்வி, கல்லாமை, நிலையாமை போன்ற வாழ்வியல் செய்திகளை திருமூலர் வழி எடுத்து இயம்புவதாக இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

1. கொங்கணர் - கொங்கணச் சித்தர் பாடல்கள், புவனேஸ்வரி அச்சகம், சென்னை. 1924

2.. சுப்பிரமணியன் ச.வே, தொல்காப்பிய விளக்கவுரை, மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்.2015

3. சுப்பிரமணியன் ச.வே, பதிணெண்கீழ்கணக்கு நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-08.2017

4. முனைவர் தமிழ் பிரியன் - பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், சங்கர் பதிப்பகம், சென்னை.

5.முனைவர் தமிழ்ப்பிரியன் பட்டினத்தார் பாடல்கள், அருணா வெளியீடு, சென்னை.

6.இளமுனைவர் தமிழ்ப்பிரியன், ஆசாரக் கோவை நான்மணிக்கடிகை,கற்பகம் புத்தகாலயம், சென்னை 17.2007

7. பேராசிரியர் புலவர் மாணிக்கம் அ. - பன்னிருதிருமுறைகள், திருமந்திரம், வர்த்தமானன் பதிப்பக வெளியீடு, சென்னை.

8. பண்டிதர் வடிவேலுயா ரவர்கள் மா. B.இரத்தின நாயகர் அன்டு சன்ஸ் பதிப்பு, சென்னை. 1953.

9. மெய்யப்பன். ச. - திருக்குறள், பரிமேலழகர் உரை மணிவாசர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை. 2017.